முருகப்பெருமான் துணை

**மகான் சிவானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.06.2023**, செவ்வாய்கிழமை

1. யோகராஜனே அரங்கா வாழ்க
உண்மைப் பொருள் கண்டடைய
வாகுடனே மக்களை நோக்கி
வரம் தருகின்ற ஞான வள்ளலே
2. வள்ளலே உன் பெருமை கூறி
வரமென அறிவுரை ஆசி
வல்லமைபட சோபகிருது மிதுன திங்கள்
வழங்குவேன் பஞ்சதிகதி குசன் வாரம்

(சோபகிருது வருடம் ஆனி மாதம் **05** ம் நாள், **20.06.2023**, செவ்வாய்கிழமை)

3. வாரமதில் சிவானந்தர் யானும்
வையகம் நலம் பெற வேண்டி
ஆறுமுக அரங்க ஞானி காட்டும்
ஆற்றல்மிக்க அறநெறி தனை
4. நெறிதனை வேதமாக ஏற்று
நேசக்கரம் கொண்டு மக்கள்
அறம்தனை உலகினில் செய்து
ஆறுமுகா என வழிபாடுதன்னை
5. தன்னை நாளும் கடைபிடிக்க
தக்கப்படி தன்னாய்வு தனில்
இன்னல்வாரா தெளிவு கண்டு
இயம்பிடுவேன் மாற்றம் காண்பர்
6. காண்கவே அறத்தின் பலம் கூட
கட்டாயம் குருவருளை கொண்டு
மேன்மைதனை அடையும் வழி
முழுமைபட இலகுவாகி இனிதே

7. இனிதே சுத்த சைவ நெறிபட
எவ்வுயிரையும் தன்உயிராய் போற்றும்
கனிவுப்பிறந்து சிறந்துமே
கடவுளை காணும் பாக்கியமும் அடைவர்
8. அடையவே ஞான சித்திவழி
அரங்கமகான் காட்டுகின்ற
தடையிலா ஒரேவழி சன்மார்க்க
தரும வழியே என உறுதி
9. உறுதி கொண்டு செயல்பாடு
உலகமக்களிடை பெருகி
ஆறுமுகனார் வெளிப்படும்படி
அகிலம் எங்கிலும் மாற்றம்
10. மாற்றம் ஞான வழிகளாக
மகத்துவம்பட கண்டு இனிதே
ஆற்றல்பட ஆளுமைகளும்
ஆறுமுகன் ஆசி கொண்ட
11. கொண்டநல் அன்பர்கட்கே
குருவரங்கன் முன்மொழிகின்ற
தொண்டர்கட்கே வாய்ப்பாக மாறி
தெய்வ ஞான ஆட்சி மலரும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—